பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

**05 01 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. குஜராத்தின் காந்திநகரில் **Typhoid** காய்ச்சலைக் கட்டுப்படுத்த, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

2. மகாராஷ்டிராவில் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

3. புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில், புற நோயாளிகளாக சிகிச்சை பெறுவதற்காக காத்திருப்போருக்கு, இலவச தங்குமிடம் மற்றும் உணவு உள்ளிட்ட வசதிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

4. ஈரானில், அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில், 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. கேலோ இந்தியா பீச் விளையாட்டுப் போட்டிகள் டையூ-வில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குஜராத் மாநிலம் காந்திநகரில் பரவி வரும் **Typhoid** காய்ச்சலைக் கட்டுப்படுத்த, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அம்மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து, அம்மாநில துணை முதலமைச்சர் திரு.ஹர்ஷ் சங்கவி மற்றும் உயரதிகாரிகளிடம் கேட்டறிந்த அவர், தமது மக்களவைத் தொகுதியான காந்தி நகரில், டைஃபாய்டு பாதிப்பு அடையாளங்காணப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

குடிநீர் வினியோகக் குழாய்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கும், மருத்துவமனையிலேயே, உணவு மற்றும் பிற வசதிகளை செய்து கொடுக்குமாறு, குஜராத் அதிகாரிகளுக்கு திரு.அமித் ஷா அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே, பாதிப்புக்கு ஆளான 113 பேரில் 19 பேர் குணமடைந்து வீடு திரும்பியிருப்பதாகவும், 94 பேருக்கு, காந்தி நகரில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காந்திநகர் மாநகராட்சி சார்பில், 75 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள, குடிநீரை தூய்மைப்படுத்துவதற்காக, 30ஆயிரம் குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

அம்மாநிலத்தில் பொது சுகாதார சேவைகளை வலுப்படுத்துவது குறித்து புதுதில்லியில் நேற்று மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. பிரகாஷ் அபித்கருடன் நடத்திய ஆலோசனையின்போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் மக்கள் மருந்தகங்களை திறப்பதன் மூலம் மக்களுக்கு தரமான மருந்துகள் குறைந்த விலையில் கிடைப்பதை உறுதி செய்யுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இது சாமானிய மக்களின் மருத்துவ செலவுகளை பெருமளவு குறைக்கும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஃபிரான்ஸ் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், தலைநகர் பாரீசில் நடைபெற்று வரும் நெசவு மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தக் கண்காட்சி, இந்தியாவின் ஜவுளிப் பாரம்பரியம் மற்றும் படைப்பாற்றலை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்தியா-ஃபிரான்ஸ் இடையேயான வலுவான கலாச்சார ஒற்றுமையையும் இந்தக் கண்காட்சி பிரதிபலிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இன்று ஃபிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் உள்ளிட்டோருடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ள திரு. ஜெய்சங்கர், அந்நாட்டு தூதர்களின் மாநாட்டிலும் பங்கேற்கிறார்.

அதனைத் தொடர்ந்து **Luxembourg** செல்லும் அவர், அந்நாட்டு துணைப் பிரதமருடன் பேச்சு நடத்துவதுடன் இந்திய சமுதாயத்தினர் உடனும் கலந்துரையாட உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்மின் திட்டப் பணிகளை, விரைவுபடுத்துமாறு, மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் அறிவுறுத்தியுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக காஷ்மீர் சென்றுள்ள அவர், நேற்று, ரியாசி மாவட்டத்தில், நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்தார்.

இதன் ஒரு பகுதியாக, **Chenab** ஆற்றின் குறுக்கேயுள்ள சலால் அணை-யில் படிந்துள்ள வண்டல் மண்ணை அகற்றும் பணியை முழுவீச்சில் மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

பணிகளை, குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க ஏதுவாக, தொடர்புடைய அனைத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து செயல்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இன்று, **Ramban** மற்றும் **Kishtwar** மாவட்டங்களில் நடைபெற்று வரும் நீர்மின் திட்டப் பணிகளை, திரு. மனோகர் லால் பார்வையிட உள்ளார்.

<<<<>>>>

புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில், புற நோயாளிகளாக சிகிச்சை பெறுவதற்காக காத்திருப்போருக்கு, இலவச தங்குமிடம்

மற்றும் உணவு உள்ளிட்ட வசதிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன்படி, புற நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற பெயர் பதிவு செய்வதற்காக, முதல் நாள் இரவே வந்து, மருத்துவமனைக்கு வெளியே காத்துக் கிடக்கும் நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு துணையாக வருவோர், மத்திய ரிசர்வ் காவல் படையினர் உதவியுடன், அருகிலுள்ள, பாதுகாப்பான தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்று தங்க வைக்கப்படுகின்றனர்.

அவர்களுக்குத் தேவையான உணவு, கம்பளி போன்றவை, அங்கேயே வழங்கப்படுவதுடன், நோயாளிகளுக்கு டோக்கன் வழங்கப்பட்டு, அந்த வரிசைப்படியே, மறுநாள் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

நோயாளிகள் நலனின் கூடுதல் கவனம் செலுத்தும் விதமாகவும், அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் நோக்கிலும், இந்த புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, மருத்துவமனையின் இயக்குனர் ஸ்ரீனிவாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவையின் குளிர்கால கூட்டத்தொடர், இன்று தொடங்குகிறது.

இது, ஆண்டின் முதற் கூட்டத் தொடர் என்பதால், துணைநிலை ஆளுனர் திரு. வி.கே. சக்ஸேனா, பேரவையில் உரையாற்ற உள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய தில்லி சட்டப்பேரவைத் தலைவர் திரு.விஜேந்தர் குப்தா, வரும் 8-ந் தேதி வரை நடைபெற உள்ள இந்தக் கூட்டத் தொடரின்போது, முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடுகள் குறித்த தலைமைத் தணிக்கை அதிகாரி-யின் அறிக்கை, பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், பேரவை நடவடிக்கைகள், வெளிப்படையானதாகவும், திறம்படவும் செயல்படுவதை உறுதி செய்யும் விதமாக, உறுப்பினர்கள் அனைவரும், அவர்களது இருக்கையில் பொருத்தப்பட்டுள்ள கணினியில், தேசிய மின்னணு சட்டப் பேரவை செயலி.யை பயன்படுத்துமாறும் திரு.விஜேந்தர் குப்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<>>>>

தில்லி, ஹரியானா, பஞ்சாப், சண்டிகர், ஒடிசா மற்றும் உத்தரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளில், அடுத்த இரு நாட்களுக்கு கடுமையான பனிமூட்டம் நிலவக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார, மேற்குவங்கம், உத்தராகண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும், இன்று இதே நிலை நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் மேற்கு பகுதியில், கடும் குளிர் நிலவக்கூடும் எனவும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஈரானில், அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில், கடந்த ஒரு வாரத்தில் **16** பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டில் நிலவும், விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள், கடந்த மாதம் **28**-ந் தேதி முதல் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதுவரை இல்லாத அளவிற்கு, அரசுக்கு எதிராக ஏற்பட்டுள்ள எதிர்ப்பு காரணமாக, ஈரான் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், இந்தப் போராட்டத்திற்கு, ஈரான் அரசே தீர்வு காணும் என்றும், இதில் அன்னிய நாடுகளின் தலையீட்டை, ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும், அரசு உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

<<<<>>>>

துபாய் மன்னர் **Sheikh Mohammed Bin Rasheed Al-Maktoum** ஐக்கிய அரபு எமிரேட் பிரதமராக **20** ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார்.

கடந்த **2006**ஆம் ஆண்டு இதே நாளில் பொறுப்பேற்ற அவர், தமது பதவி காலத்தில் தம்முடன் பணியாற்றிய இந்நாள்-முன்னாள் அமைச்சர்களுடன் கலந்துரையாடி தமது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்.

இந்த சந்திப்பின்போது ஐக்கிய அரபு எமிரேட் அதிபர் திரு. **Sheikh Mohammed Bin Zayed Al-Nahyan,** பிரதமர் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்து சாதனைகளைப் படைக்க வாழ்த்து தெரிவித்தார்.

<<<<>>>>

சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்பினரின் ஆயுதக் கிடங்கைக் குறிவைத்து, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகள், கூட்டாக, வான் தாக்குதலை நடத்தியுள்ளன.

சிரியாவின் மத்தியப் பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க **Palmyra** நகரை ஒட்டிய மலைப் பகுதி, குகைகளில், ஐ.எஸ் அமைப்பினர், பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடிப்

பொருட்களை, பதுக்கி வைத்திருப்பதாக, கிடைத்த தகவலின்பேரில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்தும், பிரான்சும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக, தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

<<<<>>>>

கேலோ இந்தியா பீச் விளையாட்டுப் போட்டிகள் டையூ-வில் உள்ள Ghoghla கடற்கரையில் இன்று தொடங்குகிறது.

டாமன்-டையூ மற்றும் தாத்ரா-நாகர் ஹவேலி யூனியன்பிரதேச அரசு சார்பில் நடத்தப்படும் இப்போட்டி இம்மாதம் 10ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

கால்பந்து, வாலிபால், கபடி, நீச்சல் உள்ளிட்ட 8 விளையாட்டுகளில் நாட்டில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 100 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

பதக்கம் அல்லாத பிரிவில் மல்லர்கம்பம், கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகள் நடைபெறுகிறது.

நாட்டில் இளையோரிடையே விளையாட்டுக் கலாச்சாரத்தை ஊக்குவித்து அவர்களை ஆரோக்கியமானவர்களாக உருவாக்கும்

நோக்கில் இந்தப் போட்டிகள் நடத்தப்படுவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

-----------------

தேசிய சீனியர் வாலிபால் சாம்பியன் போட்டியின் இன்றைய லீக் ஆட்டத்தில் தமிழக அணி, ஆடவர் பிரிவில் - ரயில்வே அணியை எதிர்கொள்கிறது.

வாரணாசியில் இப்போட்டி மாலை மணி 4.30க்கு நடைபெறும்.

மகளிர் பிரிவில் தமிழக அணி - ஜம்மு-கஷ்மீர் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு நடைபெறுகிறது.

---------------

தேசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் பிரிவில் அமித் பங்கலும், மகளிர் பிரிவில் Sagar-ம் வெற்றி பெற்றுள்ளனர்.

நொய்டாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சர்வீஸஸ் அணி சார்பில் பங்கேற்ற அமித் பங்கல், Bantam Weight பிரிவில் பிஹாரின் முகமது சுல்தானை வீழ்த்தினார்.

இதேபோன்று மகளிர் Heavy Weight பிரிவில் ஹரியானாவின் Sargar, கேரளாவின் எட்வினை வீழ்த்தினார்.

**10 பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் நாடு முழுவதுமிருந்து சுமார் 600 பேர் பங்கேற்றுள்ளனர்.**

**<<<<The End>>>>**